بسم الله الرحمن الرحيم

# Friday Sermon 17/10/2014

(22 DHUL-HIJJAH 1435 HIJRI)

## THE HEART – A STUDY (PART 4)

## இதயம் – ஓர் ஆய்வு - 4

**HAZRAT KHALIFATHULLAH MUNIR AHMAD AZIM (A)**

அனைத்து மக்களுக்கும் சமாதான வாழ்த்துக்கள் அறிவித்த பிறகு, தஷ்ஹீதும், தஅவ்வுசும், அல்பாத்திஹாவும் ஓதி கீழ்வருமாறு ஹஸ்ரத் கலீ:.பத்துல்லாஹ் முனீர் அஹமது அஸீம் (அ) கூறினார்.

அல்ஹம்துலில்லாஹ் சும்ம அல்ஹம்துலில்லாஹ் **இதயத்தைக்** குறித்து வெள்ளிக் கிழமை பிரசங்கத்தின் நான்காம் பகுதியினை தொடர்ந்துக் கொள்வதற்கு அல்லாஹ் எனக்கு மேலும் தௌபீக்கும் ஞானவும் வழங்கியுள்ளான்.

ஈமானின் வசிப்பிடமாகும் இதயம். ஒருவர் அல்லாஹ்விலும் அவனது தூதரிலும் நம்பிக்கை கொண்டால், அந்நபரின் இதயத்தில் எவ்விதமான **“குப்றும்” “நிபாகும்”.** இல்லையென்றால் அவ்வகையாளருக்கு ஒரு பொழுதும் அவ நம்பிக்கையாளராக மாறயியலாது. ஒரு அவநம்பிக்கையாளருக்கு பய பக்தியுடையவனாயிருக்க முடியாது. அதாவது திரு குர் ஆனையும் திரு சுன்னத்தையும் பின் பற்றிக் கொள்ள இயலாது.

அல்லாஹ் கூறுகின்றான்.

**“ எந்த மனிதனுடைய அகத்திலும் அல்லாஹ் இரண்டு இதயங்களை உண்டாக்க வில்லை” (35-5)**

மேல் சுட்டிக் காட்டிய திரு வசனத்திலிருந்து நாம் புரிந்துக் கொள்ள வேண்டியதுதென்னவென்றால், ஒரு வழியில் முரண்பாடு விளைவிக்கும் இரண்டு கருத்து இருப்பதில்லை என்பதைப் போன்றே ஒரு உடம்பில் இரண்டு இதயங்களும் உருவாகுவதில்லை. ஒரு உண்மையான முஸ்லிம், அல்லாஹ்வின் நண்பர்களிடமே நட்பை ஏற்படுத்திக் கொள்வது. அதைப் போலவே அல்லாஹ்வின் பகைவர்களிடமிருந்து அவர் விலகிக் கொள்ளவும் செய்வார். இதயத்திற்கு மிக முக்கியத்துவம் வாய்ந்த ஒரு இடம் இருப்பதால் இதில் இருப்பதற்கு மட்டுமே முன்னுரிமையுள்ளது. ஒரு ஹதீசில் ரிப்போர்ட் செய்யப்பட்டிருக்கின்றது ஹஸரத் ரசூல் (ஸல்) கூறினார். **“அல்லாஹ் உங்களின் வெளிப்படையான வடிவத்தையோ, உங்களின் செல்வங்களையோ**

**பார்பதில்லை. மாறாக, உங்களின் இதயங்களிலிருப்பதையும் உங்களின் செயல்களையும் மட்டுமே அவன் பார்க்கின்றான்''.**

ஈமானின் வசிப்பிடமாகும் இதயம். நம்பிக்கையாளர்கள் என உரிமைகோருவதும் ஆனால் அவர்களின் இதயங்களில் **''ஈமான்''** இல்லாமல் இருக்கவும் செய்கின்றவர்களைக் குறித்து அல்லாஹ் இவ்வாறு எச்சரிக்கை விடுக்கின்றான்.

**''நாங்கள் ஈமான் கொண்டோம்'' என நாட்டு புறத்து அரபிகள் கூறுகின்றார்கள். நீங்கள் ஈமான் கொள்ளவில்லை. எனிலும் நாங்கள் இஸ்லாமிற்கு வழிப்பட்டோம் என்று கூறுங்கள். ஏனெனில் உங்களுடைய இதயங்களில் ஈமான் நுழையவில்லை'' (49-15)**

அல்லாஹ் மேலும் கூறுகின்றான்.

**''எவர் ஈமான் கொண்ட பின் அல்லாஹ்வை நிராகரிகின்றாரே அவர் மீது அல்லாஹ்வின் கோபம் இருக்கின்றது. அவருடைய உள்ளம் ஈமானைக் கொண்டு அமைதி கொண்டிருக்கும் நிலையில் யார் நிர்ப்பந்திக்கப்படுகின்றாரோ அவனை தவிர. ஆனால் எவருடைய நெஞ்சம் கு.ஃ.பறைக் கொண்டு விரிவாக இருக்கின்றதோ அத்தகையோர் மீது அல்லாஹ்வின் கோபம் உண்டாகும். இன்னும் அவர்களுக்கு கொடிய வேதனையும் உண்டு'' (16-107)**

கடினமான இதயம் என்பது ஒரு பிரத்தேகமான தரத்தில்பட்ட வறுப்புறுத்தல் புத்தியாகும். அவ்வகையாளர்கள் அல்லாஹ்வின் வசனங்களை நிராகரிக்கின்றார்கள். நன்மை வாய்ந்த உபதேசங்களை அவர்களின் இதயங்கள் ஏற்றுக் கொள்வதில்லை. அல்லாஹ் பனு இஸ்ரவேல்களைக் குறித்து கூறுகின்றான்.

**''அதன் பின் வரும் உங்கள் இதயங்கள் கசப்பாகி விட்டன. கற்பாறையைப் போல் ஆயின. அல்லது கடினமாயின''. (2-75)**

கடினமில்லாத இதயம் என கூறுவது, அல்லாஹ்வின் அருகாய்மையைப் பெற்று விடும் இதயங்களாகும். திரு தூதர் (ஸல்) அவர்கள் இவ்வாறு கூறியதாக காணலாம்.

**''அல்லாஹ் அவனது பொருள்கள் நிறைத்த பெட்டியினை வைத்திருப்பது, இந்த பிரபஞ்சத்தில் வாழும் மக்கள் இதயங்களிலாகும். உங்களின் இரட்சகனின் பெட்டி தூய்மையாளராகிய மக்களின் இதயங்களிலாகும் பாதுகாப்பாக வைத்திருப்பது. அல்லாஹ் முற்றிலும் நேசிப்பது அமைதியான இதயங்களையாகும்''.**

ஒரு மனிதனுக்கு வழங்கப்படும் மிக பெரிதான தண்டனை என்பது கடுமையான இதயமாகும். ஏதேனும் ஒரு சமுதாயத்தை சார்ந்த மக்களை அல்லாஹ் வெறுத்துக் கொண்டால் அம்மக்களின் இதயங்களிலிருந்து கருணை என்னும் உணர்ச்சியை நீக்கி கொள்கின்றான். அவநம்பிக்கையாளர்களின் இதயங்களில் அவன் முத்திரை வைத்திருக்கின்றான் என அல்லாஹ் கூறியிருக்கின்றான்.

**''நிச்சயமாக கா.ஃ.பிர்களை நீர் அச்சமூட்டி எச்சரித்தாலும் அல்லது எச்சரிக்காமல் விட்டாலும் சரியே! அவர்கள் ஈமான் கொள்ள மாட்டார்கள். அல்லாஹ் அவர்களின் இதயங்களுக்கும் செவிகளுக்கும் முத்திரை வைத்து விட்டான். இன்னும் அவர்களின் பார்வை மீது ஒரு திரை கிடக்கின்றது. மேலும் அவர்களுக்கு கடுமையான வேதனையுமுண்டு''. (2-7,8).**

இதயம் ஓர் ஊற்றாகின்றது. நோக்கங்களுடைய ஊற்றும் அதுவேயாகும். நோக்கங்களுக்கு ஏற்றவாறே பிரதிபலன் கிடைப்பது. உங்களிடம் கேள்வி எழுப்பப்படுவதும் உங்கள் நோக்கங்களுக்கு ஏற்றவாறாகும்.

அல்லாஹ் கூறுகின்றான்.

**''நீங்கள் செய்யும் வீணான சத்தியங்களுக்காக அல்லாஹ் உங்களை குற்றம் பிடிக்க மாட்டான். ஆனால் உங்களுடைய இதயங்கள் சம்பாதித்து கொண்டதைப் பற்றி உங்களுக்கு குற்றம் உண்டு. அல்லாஹ் மன்னிப்போனாகவும் மிக்க பொறுமையுடையோனுமாகவும் இருக்கின்றான்'' (2-226)**

நோக்கத்திற்கு ஏற்றவாறே பதிலளிக்க முடியும் என்பது உறுதியாகும். நோக்கத்தின் தலையகம், இதயமாகும். அல்லாஹ் கூறுகின்றான்.

**''ஆகவே முன்னர் இது பற்றி நீங்கள் தவறு செய்திருந்தால் உங்கள் மீது குற்றமில்லை. ஆனால் உங்களுடைய இதயங்கள் வேண்டுமென்று கூறினால் உங்கள் மீது குற்றமாகும். அல்லாஹ் மிகவும் மன்னிப்பவனாகவும் மிக்க கிருபையுடையவனாகவும் இருக்கின்றான்''** (33-6).

மிக்க நல்லதும் விலை வாய்ந்ததுமான அல்லாஹ்வின் பரிசு என்பது நன்றி செலுத்தும் இதயமும் அல்லாஹ்வை நினைவுக் கூறிக் கொள்ளும் நாவுமாகும். திரு நபி (ஸல்) கூறியதாக இவ்வாறு காணலாம்.

**''நன்றி செலுத்துகின்ற ஒரு இதயம், அல்லாஹ்வை நினைவு கூறுகின்ற ஒரு நாவும், இவ்வுலகிலும் மறுஉலகிலும் உங்களுக்கு உதவி புரிகின்ற நேர்மையாளராகிய ஒரு மனைவியும் இவை மிக விலை வாய்ந்த ஒரு நிதியாகும்''.**

ஒவ்வொரு இதயங்களிலும் மறைந்திருக்கும் இரகசியங்களைக் குறித்து அல்லாஹ் நன்கு அறிந்தவன். நம்பிக்கை கொண்டோர்களை அல்லாஹ் இவ்வாறு அறிவுரை செய்கின்றான்.

**''அல்லாஹ்வுக்கு அஞ்சுங்கள். நிச்சயமாக அல்லாஹ் உங்கள் இதயத்திலுள்ள இரகசியங்களை எல்லாம் நன்கு அறிந்தவனாக இருக்கின்றான்''.(5-8)**

**''அல்லாஹ் உங்கள் இதயங்களில் இருப்பதை நன்கு அறிகின்றான். இன்னும் அல்லாஹ் எல்லாம் அறிந்தவன் எல்லாம் மிக்க பொறுமை வாய்ந்தவன்''. (33-52)**

நயவஞ்சகர்களைக் குறித்து அல்லாஹ் இவ்வாறு தெரிவிக்கின்றான்.

**''அத்தகையோரின் இதயங்களில் இருப்பவற்றை அல்லாஹ் நன்கு அறிவான். ஆகவே நீர் அவர்களிடமிருந்து விலகியிரும் மேலும் தெளிவான வார்த்தைகளைக் கூறும்'' (4-64)**

எச்சரிக்கை, அறிவுரை, முன் அறியிக்கை, இவையை இதயம் ஏற்றுக் கொள்வதேயாகும். அல்லாஹ் கூறுகின்றான்.

**“அவர்கள் சிலர் உம் பேச்சைக் கேட்கின்றனர். நாம் அவர்களுடைய இதயங்களில் இதை விளங்கிக் கொள்ளாமல் இருக்குமாறு திரைகளையும் இன்னும் அவர்கள் காதுகளில் செவிட்டுத் தன்மையும் ஏற்படுத்தினோம்” (6-26)**

அவர்களின் இதயங்களில் திரைகளை ஏற்படுத்தியிருப்பதால் அவர்கள் அறிவுரைகளை ஏற்றுக் கொள்ளவோ எச்சரிக்கையினை அங்கீகரித்துக் கொள்ளவோ மாட்டார்கள்.

**“நிச்சயமாக நாம் மனிதர்களிலிருந்தும், ஜின்களிலிருந்தும் அநேகரை நரகத்திற்கென்றே படைத்துள்ளோம். அவர்களுக்கு இதயம் இருக்கின்றன. ஆனால் அவற்றைக் கொண்டு அவர்கள் நல்லுணர்வு பெற மாட்டார்கள். அவர்களுக்கு கண்கள் உண்டு. ஆனால் அவற்றைக் கொண்டு அவர்கள் பார்ப்பதில்லை. அவர்களுக்கு காதுகள் உண்டு. ஆனால் அவற்றைக் கொண்டு அவர்களால் கேட்கமாட்டார்கள். இத்தகையோர் கால் நடைகளைப் போன்றவர்கள். இல்லை! அவற்றை விடவும் வழி கேடர்கள். இவர்கள் தாம் அலட்சியம் செய்தவர்களாவார்கள்” (7-180)**

அவர்கள் தீனின் உண்மைகளை உணர்ந்துக் கொள்பவர்களல்ல., ஏற்றுக் கொள்பவர்களுமல்ல. இதயம் மூலம் சிந்திப்பவர்களுமல்ல. அல்லாஹ் கூறுகின்றான்.

**“அவர்கள் பூமியில் பிரயாணம் செய்து பார்க்க வில்லையா? அவ்வாறு செய்திருந்தால் அவர்களுக்கு விளங்கிக் கொள்ளக் கூடிய இதயங்களும் செவியேற்கும் காதுகளும் உண்டாகியிருக்கும். நிச்சயமாக கண்கள் குருடாக வில்லை. எனினும் நெஞ்சுக்குள் இருக்கும் இதயங்கள் தாம் குருடாகின்றன”** (22-47).

இன்று இந்த பிரசங்கத்தை முடித்துக் கொள்ளுகிறேன். வருகின்ற வெள்ளிக் கிழமையும் இதே விஷயத்தை தொடர்ந்துக் கொள்வதற்கான தௌபீக் வழங்குவதற்காக என் இறைவனிடத்தில் நான் பிராத்தனைச் செய்கின்றேன். இன்ஷா அல்லாஹ்.

துவாவோடு நான் நிறைவுப்படுத்துகிறேன். என் இரட்சாக! பாவ மன்னிப்புக்காக மன்றாடுகின்றவர்களோடு என்னையும் உட்படுத்துவாயாக! நேர்மையானவர்களும் கட்டுப் படுக்கின்றவர்களுமான உன் அடியார்களின் கூட என்னையும் இணைத்து கொள்வாயாக! உன் கிருபையால் நீ நேசிக்கும் உன் நண்பர்களின் கூட என்னையும் சேர்த்துக் கொள்வாயாக! கருணைகளில் வைத்து முற்றிலும் உயர்ந்த கருணையுடையவனே! என் பிரார்த்தனையை ஏற்றுக் கொள்வாயாக!

**Issued by:**

Jamaat Ul Sahih Al Islam

*Dawa Department*

Tamil Nadu (Regd. No. A/693)

**Web:** www.jamaat-ul-sahih-al-islam.com

**Translated by:**

**Azim Ahmad**

Sadr Sahib'ul Faraj

Kerala/Tamil Nadu

**E-Mail:** azimahmad070@gmail.com

**Cell:** 9947181650; 9789180817